IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஆலயமரபில் இசைக்கருவிகள்

D.மலர்விழி [நாகஸ்வரம்]
முனைவர் பட்ட ஆய்வாளர்
இசைத்துறை
அண்ணாமலை பல்கலைக்கழகம்

நெறியாளர் ; முனைவர் அ. சரவணன்
தவில் உதவிப்பேராசிரியர்
இசைத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்;**

இசை அனைத்து உயிரினங்களையும் தன்வசப்படுத்தும் ஆற்றல் மிக்கது. இத்தகைய இசையை மேம்படுத்த ஆலயங்கள் பெருமளவில் பங்கு வகித்து வருகின்றன.இருப்பினும் ஆலயமரபு பொருத்தே கீர்த்தனங்களும், பாடல்களும் இசைக்கப்படுகின்றன. சில கோவில்களில் வெவ்வேறு வகைப்பட்ட இசைக்கருவிகள் இசைக்கப்படும் அவ்வாறு பயன்படுத்தப்படும் சில இசைக்கருவிகளைப் பற்றி அறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை;**

இறையும் இசையும் ஒன்றென கண்டவன் தமிழன். தமிழகத்தில் காணப்படும் ஆலயங்கள் அனைத்திலும் இசை இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. இத்தகைய இசை இறைவனுக்காக படைக்கப்பட்டது. இசை வேறு இறைவன் வேறு என்று எவராலும் பாகுபாடு காண முடியாது. இசையின் மூலமே இறைவனை தரிசித்து முக்தி பெற்றவர்கள் நாம் முன்னோர்கள். திருக்கோவில்களில் வழிபாட்டின் போது இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இக்கருவிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி முழுமையாக அறிவதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

**ஆலயமரபு**

ஆலயங்களில் பின்பற்றபபடும் வழிபாட்டுப் பழக்க வழக்கங்களே மரபு என்று அழைக்கப்படுகிறது. அவை ஒவ்வொரு ஆலயத்திதற்க்கு ஏற்றவாறு மாறுபடும். ஆலயங்களில் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம். அவை சில விசேஷ நாட்களில் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறும். மேலும் திருவிழாக்காலங்களில் 10 நாட்கள் வரை கொண்டாடப்படுகிறது. விழாக்காலங்களில் ஆலய மரபிற்க்கு ஏற்றவாறு இசைக்கருவிகளும்

இசைக்கப்படுகிறது. இறைவனிடம் பக்தி செலுத்தினால் உய்வடையலாம் என்று கொள்கை வகுத்தவர்கள் நம் முன்னோர்கள். பக்தி ஒன்பது வகையில் செய்ய முடியும் என்றனர். அவை 'நவவித பக்தி' என்று அழைக்கப்பட்டன. அவற்றுள் இறைவன் புகழைப்பாடும் 'கீர்த்தனம்' என்பதும் ஒன்று.

**இசைக்கருவிகள்** ;

ஆலய வழிபாட்டில் முதலிடம் பெற்று விளங்கிய கலைகள் அனைத்தும் தனித்தன்மை பெற்றவை. இருப்பினும் சிவபெருமான் 18 வகையான இசைக்கருவிகளுடன் பூலோகத்தில் கால் பதித்தார் என்ற செய்தி திருவாரூர் கோவில் வரலாற்றில் செவிவழி செய்தியாக பெறப்பட்டது.

| சர்வ வாத்தியம் |
|---|
| 1. பாரி நாதசுரம் |
| 2. பஞ்சமுக வாத்தியம் |
| 3. கொடுகொட்டி |
| 4. சுத்த மத்தளம் |
| 5. நாட்டு தாளம் |
| 6. ஜல்லரி (பெரிய தாளம்) |
| 7. எக்காளம் |
| 8. வாங்கா |
| 9. கர்ணா |
| 10. துத்தி |
| 11. சங்கம் |
| 12. சேமக்கலம் |
| 13. டக்கா |
| 14. பேரிகை |
| 16. தவண்டை |
| 17. புல்லாங்குழல் |
| 18. திருச்சின்னம். |

ஆகியவை சர்வ வாத்தியம் என்று கூறப்படுகிறது. அவை மட்டுமின்றி. தவளசங்கு, நபூரி, முகவீணை, பங்கா, ஒத்துடன் நாதசுரம், டமாரம் பஞ்சமுக வாத்தியம் சங்கீத வாத்தியம் (நாதசுரம்/பெரியமேளம்) தகோர வாத்தியம், ஜல்லரி வாத்தியம், ஜய, நகரா, தமுர் வாத்தியம், ராஜவாத்தியம் (தப்பட்டை பங்கையுடன்) என பல வாத்தியங்கள் காணப்படுகிறது. இவற்றில் பல கருவிகள் நடைமுறையில் இல்லை. இருப்பினும் சில கருவிகள் இன்றளவும் இசைக்கப்பட்டு வருகிறது. அவை நாகஸ்வரம், தவில், திருச்சின்னம், சுத்தமத்தளம் , பேரிமத்தளம் உடல், போன்றவைகளைக் கூறலாம்.

**நடைமுறையில் கையாளப்படும் சில வாத்தியங்களின் சிறப்பு;**

**நாகஸ்வரம்;**

இவை ஓர் மரத்தினாளான காற்றிசைக்கருவி. இக்கருவி நாகர் குல மக்கள் கையாண்டதாலும், நாகத்தின் வடிவத்தைப் பொருத்து இருப்பதாலும் இப்பெயர் பெற்றுள்ளது. இக்கருவி மங்கள இசைக்கருவி என்ற பெருமை உடையது. தமிழகம் மட்டுமின்றி பல அந்நிய நாடுகளிலும் வழிபாட்டின் போது இக்கருவி இசைக்கப்படுகிறது. இதற்கு பக்க வாத்தியமாக தவில் இசைக்கப்படுகிறது. இவற்றில் சில இசைவடிவங்களைக் காண்போம்

(i) **மல்லாரி** என்ற இசை வடிவம் நாகஸ்வரதில் மட்டுமே இசைக்கப்படும் சிறப்பைப் பெற்றது. இவை சுவாமி புறப்பாட்டின் போது இசைக்கப்படும் ஓர் இசை வடிவமாகும். கம்பீர நாட்டை இராகத்தில் இசைக்கப்படுகிறது. இவை தேர் மல்லாரி, தீர்த்த மல்லாரி,கும்ப மல்லாரி என பல வகைகளும் உண்டு. ஸ்வாமியைத் தூக்கி செல்பவர்கள் மல்லர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். மல்லர்கள் உற்சாகமாக சுவாமியை தூக்கி செல்லவே இவை உருவாக்கப்பட்டது. மல்லாரி இசை அமைதிகளைக் கொண்டு ஆலயத்தில் நடைபெறும் செயற்பாடுகளை அறியலாம்.[2] ஆலயப் பெருந்திருவிழாவின் இறுதி நாளன்று பெரும்பாலும் மல்லாரி இசைப்பதில்லை.

(ii) **ஒடக்கூறு** ; கோவிலிலிருந்து தங்கரதத்தில் சுவாமி எழுந்தருளும் வரை சுமார் நான்கு மணி நேரம் உடற்கூறு ( ஒடக்கூறு ) வாசிக்கப்படுகின்றது. அதாவது உடலின் கூற்றையும், அது அழியும் தன்மை படைத்தது என்பதையும் உணர்த்தும் ஒரு இசை வகை ஆகும்.

(iii) **எச்சரிக்கை** ;எச்சரிக்கை என்பது திருவீதிஉலா முடிவடைந்து சுவாமி திருக்கோவிலின் உள் நுழையும் போது இசைக்கப்படும் ஓர் வகை இசை வடிவமாகும். இவை சாவேரி இராகத்தில் இசைக்கப்படுகிறது. ஆலயத்தில் சுவாமி வருவதை மக்கள் அறிந்து கொள்ளவே இவை கையாளப்படுகிறது.

**தவில்**

தவில் தோற்கருவிகளின் வகையைச் சார்ந்தது. இக்கருவி மங்கள வாத்தியக் கருவியாக கருதப்படுகிறது. இவை குற்றமற்ற கருவி என்பதால் திருவிழாக் காலங்களில் கொடிமர பூஜை நடைபெறும் போதும், கும்பாபிஷேகம் தொடக்கத்தின் போதும் முதலில் தவில் வாத்தியத்தைக் கொண்டு பூஜை செய்த பிறகே நிகழ்ச்சி தொடங்கும். இக்கருவி தாளத்தை மையமாகக் கொண்டு இசைக்கப்படுகிறது. நாகஸ்வரத்தின் பக்க வாத்தியக்கருவியாக விளங்குகிறது. நாகஸ்வரத்திற்க்கு மட்டுமே பக்க வாத்தியமாக விளங்கிய இக்கருவி தற்போது ஏனைய கருவிகளுடனும் இசைக்கப்பட்டு வருகிறது.

**திருச்சின்னம்**;

திருச்சின்னம் என்பது சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக் கருவிகளில் ஒன்றாகும். இது ஒரு காற்று வாத்தியம் ஆகும். இது ஜோடிக் குழாய்களால் ஆனது. இந்த இசைக் கருவி தாஸரிகளால் ஆலய வழிபாட்டின் போது வாசிக்கப்படுகின்றது.

**உடல்**;

உடல் என்பது தோற்கருவி வகையைச் சார்ந்த ஒரு தமிழர் இசைக்கருவி ஆகும். இது தவிலைவிட பெரிய சீரான உருளை வடிவுடையது. பெரிய உடல், சின்ன உடல், சன்ன உடல் என்று அளவின் அடிப்படையில் மூன்று வகை உடல்கள் உள்ளன

**பேரிமத்தளம்**; -

மிருதங்கத்தை விட சற்று நீளமாக, சுத்த மத்தளத்தை விட சுற்றளவு குறைவாக உள்ளது பேரிமத்தளம். வைரம் பாய்ந்த பலாக்கட்டையால் செய்யப்பட்டு, ஆட்டுத்தோல் போர்த்தப்பட்டுள்ளது. ஓரடி நீளம் கொண்ட அரளிக்குச்சியால் ஒருமுகத்தில் மட்டுமே வாசிக்கப்படுகிறது.

**சுத்தமத்தளம்**;–

சுமார் 20கிலோ எடையுள்ளது தற்கால சுத்தமத்தளம். (திருவாரூரில் இசைக்கப்படும் பழமையான சுத்தமத்தளம் சுமார் 60கிலோ எடையுள்ளது) கழுத்து/தோள்பட்டையில் மாட்டி இசைக்க வேண்டும். மிருதங்கம் போலவே இருக்கும் இது, அதைவிடப் பெரிதாகவும் நீளமாகவும் இருக்கிறது. தபேலாவைப் போல அகலமான வெட்டுத்தட்டுப் பகுதியையும், மிருதங்கத்தை விட அகலமான வலம்தலைப் பகுதியையும் கொண்டது. சுத்தமத்தளம் கேரளத்தில் தான் செய்யப்படுகிறது.

**முடிவுரை** ;

தமிழர் வாழ்வியலில் இசை ஓர் முக்கிய அங்கமாக இருந்து வருகிறது. இருப்பினும் அண்டை நாடுகள் வரையில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் இசைக்கருவிகள் தமிழகத்திற்கே பெருமை சேர்க்கின்றன. இத்தகைய கருவிகள் என்றென்றும் நிலைத்து நிற்க்கும். இவற்றின் பெருமைகளை மென்மேலும் எடுத்து செல்வது தமிழர்கள் அனைவரின் கடமையாகும்.

**துணை நூற்பட்டியல்;**

(i)ஆலய வழிபாட்டில் இசை -தஞ்சாவூர் பி. எம்.சுந்தரம் (pg. no . 15 )1990

(ii)தென்னிந்திய வாத்திய இசைக்குழுவில் காற்றுக்கருவிகளின் பங்கு-ஓர் ஆய்வு - முனைவர் பட்ட ஆய்வேடு -மு. சுந்தரி 2021

(iii)தென்னக இசையியல்-செல்லத்துரை பி. டி.-வைகரைப் பதிப்பகம் 2005